# இது தமிழ்நாடு, மோடி மஸ்தான் வேலை இங்கு செல்லாது!

**சோ**ழர்களின் மீது திடீர் பாசம் கொண்ட மோடி தமிழ்நாட்டிற்கு வந்து வேட்டி சட்டையுடன் புது வேடம் போட்டுச் சென்றுள்ளார். ராஜராஜ சோழன் மற்றும் ராஜேந்திர சோழனுக்கு தமிழ் நாட்டில் சிலை வைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

வழக்கமாக, தி.மு.க. என்ன நன்மை செய்தாலும் அதை மறைத்து, உண்மையை திரித்து மக்களை ஏமாற்றும் கூட்டமொன்று உடனே புறப்பட்டுவிட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ராஜ ராஜ சோழனுக்கு முறையான புகழைச் சேர்த்திருந்தால், மோடியால் இப்படிப் பேச முடியுமா என்று தி.மு.க.வின் மீது புழுதிவாரி தூற்றத் தொடங்கி விட்டனர். அப்படி புழுதி வாரித் தூற்றும் போலிகளின் முகத்திரையை கிழிப்பதோடு, மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டியதும் நம் கடமை என்பதாலேயே இக்கட்டுரையை வரைகிறேன்.

**தமிழுக்கும், தமிழருக்கும் தி.மு.க. செய்ததைப் போல வேறு யார் செய்திருக்கிறார்கள் ?**

★ 2025 ல் சோழப்பேரரசர்களுக்கு சிலை வைப்பேன் என்று சொன்னதற்காக மோடியை வானளாவப் புகழும் அரசியல் அறிவிலிகளுக்கு 1972 ம் ஆண்டே அதாவது பா.ஜ.க. என்ற கட்சி தொடங்கப்படுவதற்கு முன்பாகவே, ஆம் நண்பர்களே பா.ஜ.க. என்ற கட்சி 1980ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால், அதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பாகவே, 1972 ம் ஆண்டே தஞ்சையில் ராஜராஜ சோழனுக்கு கம்பீரமாக சிலை எழுப்பியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். மகராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜிக்கு 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு சிலையைத் திறந்தார் மோடி. அச்சிலை திறக்கப்பட்ட சில மாதங்களிலேயே காற்றில் உடைந்து நொருங்கியது. ஆனால், அரை நூற்றாண்டைக் கடந்தும் கம்பீரமாய் நிற்கிறது கலைஞர் எழுப்பிய சோழன் சிலை..







★ சிலை எழுப்பியதோடு மட்டும் நின்றாரா ? இல்லை, 2010 ம் ஆண்டு மிகப் பிரமாண்டமாய் ராஜராஜ சோழனின் 1000 மாவது ஆண்டு சதய விழாவை தஞ்சையில் நடத்தி சோழர்களின் பெருமையை உலகறியச் செய்தவர் கலைஞர். அந்த சதய விழாவின் போது நடந்த ஒரு முக்கியமான செய்தி இக்கால தலைமுறை பலரும் அறிந்திடாத ஒன்று. அதை நினைவுபடுத்த வேண்டியது நம் கடமை.

**தஞ்சை பெருவுடையார் கோவிலைக் கட்டிய பெருந்தச்சன் சோழனுக்கு பெருமை சேர்க்க ராஜராஜனின் உருவத்தை தத்ரூபமாக செப்புச் சிலையாக வடிக்கிறான். அதோடு சோழனின் பட்டத்து அரசி, உலக மாதேவியின் சிலையையும் வடிக்கிறான். இந்த இரு செப்புச் சிலைகளும், 1940 50 காலகட்டத்தில் திருடப்படுகின்றன. திருடு போன இச்சிலைகள் இரண்டும் குஜராத்தில் உள்ள காலிகோ மியூசியத்தில் இருப்பதை அறிந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர், உடனே அப்போது குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடிக்கு இது தொடர்பாக கடிதம் ஒன்றை எழுதுகிறார். அச்சிலைகளை தமிழகத்திற்குத் தர வேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத்துகிறார் கலைஞர்.**

**கடிதம் எழுதியதோடு நில்லாமல், அன்றைய கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், இறையன்பு ஐ.ஏ.எஸ்., தொல்பொருள் ஆய்வாளர்கள் நாகசாமி, நடனகாசிநாதன், குடவாயில் பாலசுப்ரமணியம் ஆகியோர் அடங்கிய குழுவை 2010ம் ஆண்டு செப்டம்பர் மாதம் குஜராத்திற்கு அனுப்புகிறார். இக்குழு அன்றைய குஜராத் முதலமைச்சர் மோடியைச் சந்தித்து, 1000 ஆண்டு பழமையான அச்சிலைகளை தமிழ் நாட்டிற்கு சொந்தமான அப்பொக்கிசங்களை மீண்டும் தமிழ்நாட்டிற்கே எடுத்துச் செல்ல ஆவண செய்யுமாறு மோடியிடம் வலியுறுத்துகின்றனர். தமிழ்நாட்டின் அந்தக் குரலுக்கு உளப்பூர்வமாக அன்று மோடி செவி சாய்த்திருந்தால், அப்போதே அச்சிலைகள் தமிழ்நாடு வந்திருக்கும்.**

2010 ம் ஆண்டு செப்டம்பர் 25, 26 ஆகிய இரு நாட்கள் கலைஞர் நடத்திய பிரமாண்டமான சதய விழாவை ராஜராஜ சோழனும், பட்டத்து ராணி உலகமாதேவியும் சிலையாய் நின்று ரசித்திருப்பார்கள். ஆனால், அப்பணியை உளப்பூர்வமாக அப்போது செய்யாமல் போன குஜராத்தின் முன்னாள் முதலமைச்சர் மோடிதான் இப்போது இந்தியாவின் பிரதமராக சோழர்களின் மீது திடீர் பாசத்தைப் பொழிகிறார். அவரின் மோடி மஸ்தான் வேலைகளுக்கு மயங்க இது வடநாடல்ல. தமிழ்நாடு என்பது அவருக்குப் புரியவில்லை.



**" தமிழ் கேள்வி"**
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்

**இப்படி தமிழர் கலாசாரத்தைத் தொடர்ந்து உலகிற்கு பறைசாற்ற எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்த தி.மு.க.வைப் பார்த்து அரசியல் அரிச்சுவடி கூட அறியாத சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அவர்கள் போடும் நாடகத்திற்கு திரைக்கதை ,. வசனம் எழுதி அவர்களை இயக்குவது பாஜகவும் ஆர்.எஸ்.எஸ்.சும் என்பதை தமிழ் நாட்டு மக்கள் நன்கறிவர்.**

கலைஞர் காலத்தில் சோழனின் புகழ் பாடியதைப் பற்றி இன்னுமா பேசிக் கொண்டிருப்பீர்கள் . இப்போது உள்ள திராவிட மாடல் அரசு சோழர்கள் புகழ்பாட என்ன செய்தது என்ற கேள்வியையும் அந்த கபடவேடதாரிகள் எழுப்புகின்றனர். பாவம் நாளிதழ் செய்திகளை நாள் தவறாது படித்திருந்தால் கூட போதுமே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு சோழர்கள் புகழ்பாட என்ன திட்டங்களை எல்லாம் அறிவித்துள்ளது என்பதை அவர்கள் அறிந்து கொள்ள முடியுமே. ஆயினும் பரவாயில்லை, தெரியாதவர்களுக்ும், தெரிந்தும் தெரியாதது போல உண்மையை மறைத்து தி.மு.க.வின் மீது வன்மத்தை வெளிப்படுத்துவோருக்கும் சோழர்களின் புகழ்பாட இந்த திராவிட மாடல் அரசு என்னவெல்லாம் அறிவித்துள்ளது என்பதை நினைவூட்டுவது நம் கடமை.

● **2023 - 2024 ம் ஆண்டிற்கான திராவிட மாடல் அரசின் நிதி நிலை அறிக்கையில், நீண்ட காலம் சோழர்களின் தலைநகராக இருந்த தஞ்சையில், சோழர்களின் புகழைப் பறைசாற்றும் வண்ணம் மாபெரும் அருங்காட்சியகம் அமைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.**

இதற்காக தஞ்சை பெரிய கோவில் அருகே நீலகிரி தெற்குத் தோட்டம் நகர்ப்புல எண் 4 என்ற நிலப்பரப்பில் 6.39 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டு ஒதுக்கீடு பெற்று, மாபெரும் அருங்காட்சியகம் அமைக்க கருத்துரு தயாரிக்க 29.02.2024 அன்று அரசாணை வெளியிடப் பட்டது. இந்த அருங்காட்சியகத்தின் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. அதுமட்டுமல்ல, இந்த அருங்காட்சியக வளாகத்திலேயே 5 அடி உயர பீடத்தில் ராஜராஜ சோழனுக்கு 35 அடி உயரத்தில் பிரமாண்ட சிலை அமைக்கவும் தமிழக அரசு பணிகளைத் தொடங்கியுள்ளது.

ஆனால், இந்த உண்மைகளை அறியாத கூட்டம் அல்லது உண்மைகளைத் தெரிந்தும் தி.மு.க. வின் சாதனைகளை மறைத்து பா.ஜ.க. விற்கு சாமரம் வீசத் துடிக்கும் கூட்டம் சோழர்களுக்கு தி.மு.க. என்ன செய்தது என்று வழக்கம் போல் அவதூறு பரப்பத் தொடங்கியுள்ளது.

● தமிழுக்கு செம்மொழி அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது தி.மு.க.

● சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது தி.மு.க,

● இருமொழிக் கொள்கையால் தமிழை இன்னும் காத்து நிற்பது தி.மு.க.

● தமிழிலும் வழிபாடு என்பதை உறுதி செய்தது தி.மு.க.

● வள்ளுவனுக்கு வானுயர சிலை எழுப்பியது தி.மு.க.

● கீழடியில் அருங்காட்சியகம் அமைத்துத் தந்தது தி.மு.க.

● இரும்பின் காலம் தமிழ்நாட்டில் இருந்து தான் தொடங்கியது என்ற வரலாற்று உண்மையை உரக்கச் சொன்னது தி.மு.க.

● நெல்லையில் பொருநை அருங்காட்சியகத்தை அமைத்திருப்பது தி.மு.க.




● மதுரையில் ஜல்லிக்கட்டு மைதானம் கட்டித் தந்தது தி.மு.க.

இப்படி தமிழுக்கும் தமிழர்களுக்கும் தி.மு.க. அரசு தந்த திட்டங்களைப் போல் வேறு யார் திட்டங்களைத் தந்துள்ளனர்.

ஒடிசா தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காக பூரி ஜெகன்நாதர் ஆலயத்தின் கருவூல அறையின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று தமிழர்கள் மீது திருட்டுப் பட்டம் சுமத்திய மோடி, தமிழ்நாட்டு மக்களையும் அதே போல் ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று எண்ணி சோழர்களை கையில் எடுத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் மோடி,

**மோடிக்கு நாம் மீண்டும் மீண்டும் உரக்கச் சொல்வது ஒன்று மட்டும்தான். "மோடி அவர்களே இது தமிழ்நாடு. உங்கள் மோடி மஸ்தான் வேலைகள் இங்கு எடுபடாது" . முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு ஓரணியில் வெல்லும். அதை வரும் காலம் உங்களுக்கு உரக்கச் சொல்லும். ●**

---

### இந்தியாவின் வாகன உற்பத்தி – மின் வாகன உற்பத்தியின் தலைமையிடம் தமிழ்நாடுதான்!

## நெஞ்சை நிமிர்த்தி சொல்வேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

### "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஆக. 6 -

இந்தியாவின் வாகன உற்பத்தி - மின் வாகன உற்பத்தியின் தலைமையிடம் தமிழ்நாடுதான் என நெஞ்சை நிமிர்த்தி சொல்வேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 5.8.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவிலேயே தொழில்துறைக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதனால் உலகளவில் முன்னணி தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டுக்கு படையெடுக்கின்றன என்றால் அது மிகையாகாது.

2021ம் ஆண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்தது. இதையடுத்து தொலைநோக்கு சிந்தனைகளுடன் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றுக்கு தேசிய அளவில், சர்வதேச அளவில், ஐ.நா மன்றத்திலும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. அதிக தொழிற்சாலைகளை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முன்னணி மாநிலம். உலகளாவிய திறன் மையங்களில் மும்பை, புனே, ஐதராபாத், பெங்களூரு முதலான நகரங்களைவிட சென்னை 24.5 சதவிகித வளர்ச்சியுடன் 94,121 திறன் மையங்கள் கொண்டு இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


தினகரன்
ஆகஸ்ட் 5, 2025 செவ்வாய்க்கிழமை
முன்னோடி தமிழ்நாடு
இந்தியாவிலேயே தொழில்துறைக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இதனால் உலகளவில் முன்னணி தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டுக்கு படையெடுக்கின்றன என்றால் அது மிகையாகாது.
2021ம் ஆண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சி அமைந்தது. இதையடுத்து தொலைநோக்கு சிந்தனைகளுடன் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றுக்கு தேசிய அளவில், சர்வதேச அளவில், ஐ.நா மன்றத்திலும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. அதிக தொழிற்சாலைகளை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முன்னணி மாநிலம். உலகளாவிய திறன் மையங்களில் மும்பை, புனே, ஐதராபாத், பெங்களூரு முதலான நகரங்களைவிட சென்னை 24.5 சதவிகித வளர்ச்சியுடன் 94,121 திறன் மையங்கள் கொண்டு இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சிகளால், தொழிற்சாலைகள் புதிது புதிதாக தொடங்கப் பட, நம் நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளுக்கும் சென்று, செய்து கொள்ளப்பட்ட 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், ஈர்த்துள்ள ரூ.10,27,547 கோடி புதிய முதலீடுகள், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 32.23 லட்சம் வேலை வாய்ப்புகள் காரணமாக தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடமாக திகழ்கிறது. கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில் வேறு எந்த மாநிலமும் அடையாத வளர்ச்சியாக 9.69% வளர்ச்சி கண்டு இந்தியாவில் முதல் மாநிலம் எனும் பெருமையை பெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதில், 2020-2021ல் 26.15 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருந்த ஏற்றுமதி 2024-2025ல் 52.07 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இருமடங்கு உயர்ந்து சாதனை படைத்தது. மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களை விட அதிகமாக 14.65 பில்லியன் டாலர் மதிப்புடைய மின்னணு பொருட்களை ஏற்றுமதி செய்து முத லிடம் பெற்றுள்ளது. 2020-2021ல் 2.9 கோடியாக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை 2024-2025ல் 3.87 கோடியாக உயர்ந்துள்ளது.

தோல் பொருட்கள், ஜவுளி துணிகள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடமும், புத்தாக்க தொழில்கள் தரவரிசை பட்டியலில் 2018ல் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, 2022ல் முதலிடம் என அனைத்து துறைகளிலும் முன்னணி மாநிலமாக விளங்குகிறது. அந்த வரிசையில் தூத்துக்குடியில் மிக பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள 'வின் பாஸ்ட்' கார் உற்பத்தி தொழிற்சாலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். 3,300 பேர் வேலை வாய்ப்பை பெறுகின்றனர்.

வியட்நாம் நாட்டைச் சேர்ந்த வின்பாஸ்ட் என்ற மின்சார வாகன உற்பத்தி நிறுவனம் தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம் சிப்காட்டில் ரூ.16 ஆயிரம் கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. முன்னதாக, ஆண்டுக்கு 1.5 லட்சம் வாகனங்களை உற் பத்தி செய்யும் வகையில், தூத்துக்குடியில் மின்சார கார் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க தமிழக அரசுடன் ஒப்பந்தம் மேற்கொண்டது. கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அடிக்கல் நாட்டி 17 மாதங்களில் தமிழ்நாட்டில் தனது நிறுவனத்தை தொடங்கி உள்ளது. தமிழ் நாடு தான் இந்தியாவின் வாகன உற்பத்தி மற்றும் மின் வாகன உற்பத்தியின் தலைமையிடம் என்று நெஞ்சை நிமிர்த்தி சொல்வேன் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறியுள்ளார். இந்தியாவிலேயே அனைத்து துறைகளிலும் அபார வளர்ச்சி பெற்று முன்னோடி தமிழ்நாடாக விளங்குகிறது என்பது மகிழ்ச்சியான தருணமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### பீகார் வாக்காளர் பட்டியல்: விவாதிக்க அனுமதி மறுப்பு!

## மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பதாகைகளை ஏந்தி முழக்கம்!

புதுடெல்லி, ஆக. 6–

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் காரணமாக நாடாளுமன்றம் நேற்று முடங்கியது. இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை நேற்று கூடியதும் ஜார்கண்ட் முன்னாள் முதலமைச்சர் சிபுசோரன் மறைவுக்கு 2 நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து பல்வேறு விவகாரங்கள் குறித்து மக்களவையில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. குறிப்பாக பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் குறித்து உடனே விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் அனுமதி அளிக்கப்படவில்லை. இதனை கண்டித்து அவையின் மையப்பகுதிக்குச் சென்று முழக்கங்களை எழுப்பிய அவர்கள், பதாகைகளை ஏந்தி எதிர்ப்பை பதிவு செய்தனர். இதனால் அவையில் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை**

மாநிலங்களவையில் மத்திய பாதுகாப்புப் படையினருக்கு அனுமதி அளிக்கப்பட்ட விவகாரத்தை எதிர்க்கட்சிகள் எழுப்பினர். அப்போது பேசிய அவையின் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் நாராயண சிங், பாதுகாப்பு காரணங்களுக்காகவே சி.ஐ.எஸ்.எஃப் வீரர்களுக்கு மாநிலங்களவையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, போராட்டம் நடத்துவதும், கேள்விகளை எழுப்புவதும் எதிர்க்கட்சிகளின் உரிமை என்றும், எதிர்க்கட்சிகளின் போராட்டத்தை தடுக்கவே மத்திய பாதுகாப்புப் படை வீரர்களை மாநிலங்களவைக்குள் அனுமதித்திருப்பதாகவும் குற்றம்சாட்டினார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தீவிரவாதிகள் போல் நடத்துவது ஏன் என்றும் வினவினார். அவையை நடத்துவது மாநிலங்களவை தலைவரா அல்லது உள்துறை அமைச்சர் அமித்ஷாவா என்றும் மல்லிக்கார்ஜுன கார்கே கேள்வி எழுப்பினார்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, சின்னசேலம் வடக்கு ஒன்றியம், நாககுப்பம் ஊராட்சியில், ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அ.வெ.அன்புமணி மாறன் ஏற்பாட்டில் சுமார் 50க்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சிகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். புதிதாக கழகத்தில் இணைந்தோர்க்கு மாவட்டக் கழகச் செயலாளர் தனது பொற்கரங்கலால் வேட்டி, சேலை அணிவித்து அன்புடன் வரவேற்று வாழ்த்துக்கள் தெரிவித்தார், இதில் மாவட்ட கவுன்சிலர் வேல்முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோம்பையன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆறுமுகம், ஊராட்சி மன்ற தலைவர் கோகிலா பெரியான், துணை தலைவர் பத்மினி சின்னதுரை ஆகியோர் உடன் இருந்தனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் ரூ.1.83கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.